# எந்தன் இதய கானம்

எந்தன் இதய கானம் என்றும் உன்னைப் பாடும்
இயேசுவே என் தலைவன் என்று
எங்கும் எடுத்துக் கூறும்

**1**
காலையில் பண்பாடும் பறவைக் கூட்டங்கள்
சோலையில் நின்றாடும் மரத்தின் தோட்டங்கள்
மாலையில் என்மீது வீசும் தென்றலும்
மருதமகிழச் செய்யும் மழையின் துளிகள்
நீரினில் நீந்திடும் மீனினோட்டங்கள்
நிலத்தினில் பாய்ந்திடும் விலங்கின் கூட்டங்கள்
எல்லாம் உன் புகழ் பாடவே - உன்
சொல்லாலே உயிர் வாழுதே

**2**
தெய்வமே என்றாகும் மழலை மொழிகளும்
சேயாய் என்றாகும் தெய்வ மாந்தரும்
கோவிலில் நின்றோங்கும் புகழ்ச்சிப் பாக்களும்
பூமியில் நற்சேவை ஆற்றும் தொண்டரும்
நீதியும் நேர்மையும் தீhப்பின் கூக்குரல்
நியாயமும் தருமமும் தேடும் ஏக்கங்கள்
எல்லாம் உன் புகழ் பாடவே - உன்
சொல்லாலே உயிர் வாழுதே